# நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர்! நேற்று முன்தினம் (28–7–2025) நிகழ்வுகள்!



**1. பெண்கள் பாதுகாப்புக்கான புகார் கமிட்டி சரியாக செயல்படுகிறதா?**

**கனிமொழி கருணாநிதி கேள்வி!**



ஒன்றிய அரசின் மத்திய பல்கலைக் கழகங்களில் பெண்களின் பாதுகாப்புக்கான Internal Complaints Committees பற்றிய கேள்விகளை திமுக துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி ஜூலை 28 ஆம் தேதி மக்களவையில் எழுப்பினார்.

பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) விதிமுறைகள் மற்றும் பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் தடை மற்றும் தீர்வுச் சட்டம் (2013) வழிகாட்டுதல்களின் கீழ் ஒன்றிய அரசின் மத்திய பல்கலைக்கழகங்களில் Internal Complaints Committees எனப்படும் உள் புகார் குழுக்களை (ஐசிசி) நிறுவுவது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளதா?

அப்படியென்றால், ஐசிசிகளை அமைத்த மத்திய பல்கலைக்கழகங்களின் விவரங்கள் என்ன? விதிகள், வழிகாட்டுதல்களின்படிதான் குழுக்கள் அமைக்கப்பட்டதா, அக்குழுக்களின் உறுப்பினர்கள் பற்றிய விவரங்கள் என்ன?

மேற்கண்ட வழிகாட்டுதல்கள் மற்றும் சட்டத்தை கண்டிப்பாகப் பின்பற்றுவதை உறுதி செய்ய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மத்திய பல்கலைக் கழகங்களில் அமைக்கப்பட்ட ஐசிசி குழுக்களின் செயல்பாடுகள் பற்றி அரசாங்கம் மதிப்பீடுகள் அல்லது தணிக்கைகளை நடத்தியதா? இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?" ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. கேட்டிருந்தார்.

**2. சரியும் ஜி.எஸ்.டி. வரி வசூல்! வீழ்கிறதா நாட்டின் பொருளாதாரம்?**

**ஆ. ராசா எம்.பி. கேள்வி!**



கடந்த ஆண்டுகளில் ஒப்பிடுகையில் ஜூன் 2025இல் மிக குறைந்த அளவு ஜி.எஸ்.டி. வரி வசூல் நடந்திருப்பதாக வரும் செய்திகளின் மீது விளக்கம் கேட்டு நாடாளுமன்றத்தில் திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜி.எஸ்.டி. வசூலில் ஏற்பட்ட சரிவு நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளின் வீழ்ச்சியைக் காட்டுகிறதா? ஜிஎஸ்டி விகித அடுக்குகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக ஜி.எஸ்.டி. கவுன்சில் மற்றும் விகித நிர்ணயக் குழு ஏதேனும் அறிக்கை சமர்பித்திருக்கிறதா? மற்றும் பொது மக்கள் பயன்படுத்தும் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் மீதான ஜி.எஸ்.டி. விகிதங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை ஜி.எஸ்.டி. கவுன்சிலில் அரசாங்கம் எப்போது தொடங்கும்? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**3. முறையாக வழங்கப்படுகிறதா முத்ரா கடன்கள்?**

**ஆரணி தரணிவேந்தன் கேள்வி!**



தமிழ்நாட்டில் ஒன்றிய அரசின் முத்ரா கடன் திட்டத்தின்கீழ் பயன்பெற்றவர்கள் குறித்து நாடாளுமன்றத்தில் ஆரணி மக்களவை தொகுதி உறுப்பினர் தரணிவேந்தன் பின் வரும் கேள்விகளை எழுப்பியுள்ளார்.

இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து அனுமதிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை மற்றும் இந்தத் திட்டத்தால் பயனடைந்த மொத்த தனிநபர்கள் மற்றும் வணிகங்களின் விவரங்கள் என்ன?

தொழில்முனைவோரை ஊக்குவிப்பதிலும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் முத்ரா திட்டத்தின் செயல்திறனை அளவிடுவதற்கு அரசாங்கம் நடத்திய ஆய்வுகள் என்ன?

முத்ரா திட்டத்தின் நன்மைகள் குறிப்பாக கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள சிறு மற்றும் குறு நிறுவனங்களைச் சென்றடைவதை உறுதிசெய்ய ஒன்றிய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

தமிழ்நாட்டின் விளிம்புநிலை சமூகங்கள் மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினரிடையே முத்ரா திட்டம் சென்றடையும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

முத்ரா கடன்களுக்கான விண்ணப்ப செயல்முறையை எளிமைப்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

விவசாயம், உற்பத்தி மற்றும் சேவைகள் போன்ற துறைகளுக்கு முத்ரா திட்டம் சிறு நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மைக்கு பங்களித்துள்ளதா? அந்த முயற்சிக்கான எதிர்கால இலக்குகள் என்ன?

தமிழ்நாட்டில் முத்ரா கடன்களின் தவணை தவறுதல் விகிதம் மற்றும் கடன் தவறுதல் தொடர்பான அபாயங்களைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் என்ன?

**4. பணவீக்கத்தில் தங்க விலையின் தாக்கம் நடவடிக்கை என்ன?**

**அரக்கோணம் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!**

பணவீக்கத்தில் தங்க விலையின் தாக்கம் குறித்து மக்களவையில் அரக்கோணம் தொகுதி திமுக எம்.பி. ஜெகத்ரட்சகன் கேள்விஎழுப்பியுள்ளார்.



கிரெடிட் ரேட்டிங் இன்ஃபர்மேஷன் சர்வீசஸ் ஆஃப் இந்தியா லிமிடெட் (CRISIL)இன் சமீபத்திய அறிக்கையின்படி, கடந்த பன்னிரண்டு மாதங்களில் தங்க விலைகள் உயர்ந்துள்ளன. அது சில்லறை பணவீக்கத்தில் கிட்டத்தட்ட 17 சதவீதத்திற்கு பங்களித்துள்ளன என்பது உண்மையா?

அதிக தங்கத்தை சார்ந்திருக்கும் மாநிலங்களில் வீட்டு பட்ஜெட்டுகளில் இந்தப் போக்கு விகிதாசாரமற்ற முறையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது குறித்த விவரங்கள் என்ன?

நாடு முழுவதும் குறைந்த மற்றும் நடுத்தர வருமானக் குடும்பங்களின், குறிப்பாக தமிழ்நாட்டின் கிராமப்புறப் பெண்களின் நுகர்வு மற்றும் சேமிப்பில் நீடித்த தங்க பணவீக்கத்தின் தாக்கம் குறித்து அரசு அல்லது ரிசர்வ் வங்கியால் ஏதேனும் ஆய்வு நடத்தப்பட்டதா?

தங்க பணவீக்கம் அதிகரித்து வருவதால் நாடு முழுவதும் முறைசாரா தங்கக் கடன்கள், நகை விற்பனை மற்றும் அடகு தரகு நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதை அரசாங்கம் கவனித்ததா? அப்படியானால், இது தொடர்பாக அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

**5. 2036 ஒலிம்பிக் போட்டிகளை இந்தியாவில் நடத்த நடவடிக்கை என்ன?**

**வேலூர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி**



2028ஆம்ஆண்டு அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் 2032 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பனில்நடைபெற உள்ள அடுத்த இரண்டு ஒலிம்பிக் போட்டிகளில் விளையாட்டு வீரர்கள் சிறப்பாக செயல்பட அரசாங்கத்திடம் ஏதேனும் புதிய, சிறப்பு திட்டங்கள் மற்றும் பயிற்சி அட்டவணைகள் உள்ளதா என்று நாடாளுமன்றத்தில் வேலூர் தொகுதி திமுக எம்.பி. கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் 2036ஆம் ஆண்டு கோடைக் கால ஒலிம்பிக்கை நடத்த இந்தியா ஆர்வமாக உள்ளதா என்றும் அதற்காக அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட/எடுக்கப்படும் நடவடிக் கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**6. ஒப்பந்த தொழிலாளர் நலன் மற்றும் சமூகப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் என்ன?**

**தயாநிதி மாறன் கேள்வி!**



கொரோனா பேரிடர் காலத்திற்கு பிறகு நாட்டில் வேலையின்மை அதிகரித்துள்ளது குறித்து கவலை தெரிவித்துள்ள திமுக மக்களவை உறுப்பினர் தயாநிதி மாறன் தற்போதைய வேலையின்மை விகிதம் குறித்த தகவல்களை வெளியிடுமாறு ஒன்றிய அரசிடம் நாடாளுமன்றத்தில் கேட்டுள்ளார்.

வேலையின்மை குறித்த தரவுகளை வயது, பாலினம் மற்றும் மாநில வாரியாக பிரித்து அவற்றை கொரோனா பேரிடர் காலத்திற்கு முந்தைய நிலைகளுடன் ஒப்பீடு செய்யவேண்டும் என அவர் கூறியிருக்கிறார்.

முறைசாரா துறையில் வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் திறன் மேம்பாடு உட்பட அதிகரித்து வரும் இளைஞர் வேலையின்மை பிரச்சினையை நிவர்த்தி செய்ய கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

முறைசாரா மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களின் பொருளாதார வளர்ச்சி குறித்து அரசாங்கத்தால் ஏதேனும் ஆய்வு செய்யப்பட்டுள்ளதா? அப்படியானால், ஊதியங்கள், வேலை பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றில் ஏற்படும் தாக்கம் உள்ளிட்ட விவரங்கள் என்ன?

நாடு முழுவதும் ஊதியச் சட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்புச் சட்டத்தை செயல்படுத்துவதை வலுப்படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?

இளைஞர்களுக்கான வேலையின்மை உதவித்தொகை அல்லது ஆதரவுத் திட்டத்தைப் பரிசீலிக்க அரசாங்கத்திற்கு ஏதேனும் திட்டம் உள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

**7. SC/ST பிரிவினருக்கான தேசிய தொழில் மையங்களின் செயல்பாடுகள் என்ன?**

**திருவண்ணாமலை சி.என்.அண்ணாதுரை – காஞ்சிபுரம் ஜி.செல்வம் கேள்வி!**





தற்போது தமிழ்நாட்டில் செயல்படும் பட்டியலினத்தவர்கள் மற்றும் பழங்குடியினருக்கான (SC/ST) தேசிய தொழில் சேவை மையங்களின் (NCSC) எண்ணிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் திமுக மக்களவை உறுப்பினர்கள் சி. என். அண்ணாதுரை மற்றும் ஜி. செல்வம் கேள்வி எழுப்பியுள்ளனர். அதன் விவரம் பின்வருமாறு:

2022-23 மற்றும் 2023-24 நிதியாண்டுகளில் இந்த மையங்கள் மூலம் ஆலோசனை, பயிற்சி அல்லது பயிற்சி பெற்ற மொத்த SC/ST பயனாளிகளின் எண்ணிக்கை என்ன?

தமிழ்நாட்டின் மலைப்பகுதிகள் அல்லது பழங்குடிப் பகுதிகளில் உள்ள பட்டியல் பழங்குடி சமூகங்களுக்காக இந்த மையங்களின் செயல்பாடுகளுக்கு உள்ள இலக்குகள் என்ன?

தமிழ்நாட்டில் இந்த மையங்கள் மூலம் பதிவுசெய்யப்பட்ட, பயிற்சி பெற்ற, வேலை பெற்ற மற்றும் வேலை தேடுபவர்களின் எண்ணிக்கையின் விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் இந்த மையங்களை விரிவுபடுத்த அல்லது மேம்படுத்த அரசாங்கத்திற்கு ஏதேனும் திட்டங்கள் உள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

**8. பயனளிக்கிறதா சிறு, குறு தொழில்களுக்கான கடன் உத்திரவாத திட்டம்? மேம்படுத்தும் நடவடிக்கை என்ன?**

**பெரம்பலூர் அருண் நேரு கேள்வி!**



குறு மற்றும் சிறு தொழில்களுக்கான பரஸ்பர கடன் உத்தரவாதத் திட்டத்தின்கீழ், இதுவரை ஒதுக்கப்பட்ட, அனுமதிக்கப்பட்ட, வழங்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட நிதியின் விவரங்கள் கேட்டு நாடாளுமன்றத்தில் பெரம்பலூர் மக்களவை தொகுதி திமுக உறுப்பினர் அருண்நேரு கேள்விஎழுப்பியுள்ளார்.

இத்திட்டம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து பயன்பெற்றவர்களின் விவரங்கள் மாநில வாரியாக மற்றும் ஆண்டு வாரியாகவெளியிட வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் வர்த்தக அமைப்புகள் மற்றும் மாநில அதிகாரிகளை அறிமுகப்படுத்த நடத்தப்பட்ட விழிப்புணர்வு அல்லது வெளிநடவடிக்கை பிரச்சாரங்களின் விவரங்கள் என்ன?

பயிற்சி, கையகப்படுத்தல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் உள்ளிட்ட பரஸ்பர உத்தரவாதக் கூட்டுறவை எளிதாக்குவதற்கான திறனை உருவாக்க அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

பெண்களுக்கு மட்டுமேயான பரஸ்பர உத்தரவாதக் குழுக்கள் அல்லது இளைஞர் தொழில்முனைவோர் தலைமையிலான கூட்டுறவை ஊக்குவிக்க ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்பு ஏற்பாடுகள் என்ன?

சட்டரீதியான கட்டமைப்பு அல்லது ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள் மூலம் தேசிய அளவில் பரஸ்பர கடன் உத்தரவாத அமைப்புகளை நிறுவனமயமாக்க அரசாங்கம் பரிசீலித்து வருகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**9. தொகுதி மறுவரையறை மாநிலங்களை பாதிக்கும்!**

**பி. வில்சன் அவர்களின் மார்ச் 19 உரைக்கு ஒன்றிய சட்டத்துறை அமைச்சர் கடிதம் மூலம் பதில்.**



நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை தொடர்பாக திமுக எம்.பி. பி. வில்சன் ஆற்றிய உரைக்கு மத்திய சட்ட அமைச்சர் தனது கடிதத்தின் மூலம் பதில் அளித்துள்ளார். அதில் தொகுதி மறுவரையறை மாநிலங்களை பாதிக்கும் என்பதை ஒப்புக்கொண்டார். மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த பின்னரே, மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களில் இடங்களை மறுசீரமைப்பதற்கு தொகுதி மறுவரையறை ஆணையம் உருவாக்கப்படும் என்று அவர் கூறினார். அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்புக்குப் பிறகுதான் தொகுதி மறுவரையறை ஆணையம் நிறுவப்படும், எனவே அதன் அடிப்படையை அப்போதுதான் விவாதிக்க முடியும். மக்கள் தொகை கணக்கெடுப்பு புள்ளிவிவரங்கள் இல்லாத நிலையில் தொகுதி மறுவரையறையின் விளைவை ஊகிப்பது பொருத்தமானதாக இருக்காது.

ஒன்றிய சட்டத்துறை அமைச்சரின் இந்த பதில் மாண்புமிகு தம்ழிநாடு முதலமைச்சர் அவர்கள் முன்கூட்டியே எழுப்பிய கேள்விகளை ஆதரிக்கிறது. அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 இல் நடைபெறும் என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ளதால், 2026 வரை அரசியலமைப்பில் இட ஒதுக்கீட்டில் தற்போதுள்ள நிலை இயற்கையாகவே முடிவுக்கு வரும், இது தொகுதி மறுவரைக்கான சாத்தியத்திற்கு வழிவகுக்கும். இதன் விளைவாக, மாநிலங்களின் அரசியல் அதிகாரம் குறையும்.

கிராமப்புற – தொலைதூரப் பகுதிகளில்

# ஜெனரிக் மருந்துகளின் நன்மைகள் குறித்த விழிப்புணர்வு அதிகரிக்கப்படுமா?

## மக்களவையில் – தே.மலையரசன் கேள்வி!



புதுடெல்லி, ஜூலை. 30-

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் எழுப்பிய கேள்விகள் பின்வருமாறு:-

பொதுமக்களிடையே குறிப்பாக கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் ஜெனரிக் மருந்துகளின் நன்மைகள் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் என்ன?

ஜெனரிக் மருந்துகளின் பயன்பாட்டை ஊக்குவிப்பதில் ஒன்றிய அரசுக்கு ஏதேனும் சவால்கள் உள்ளதா? அப்படியானால் அந்த சவால்களை சமாளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

தமிழ்நாட்டில் திறக்கப்பட்டுள்ள மொத்த ஜெனரிக் மையங்கள் எத்தனை? நடப்பு நீதி ஆண்டில் அவை அதிகரிக்க நடவடிக்கைகள் ஏதேனும் ஒன்றிய அரசு எடுத்துள்ளதா?

ஜெனரிக் மருந்துகள் முன் முயற்சியின் கீழ் உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் அதிக விலை உயர்ந்த மருந்துகளை சேர்க்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா?

அரசு வழிகள் மூலம் விற்கப்படும் ஜெனரிக் மருந்துகளின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் என்ன? என்ற கேள்விகளை எழுப்பினார்.



தஞ்சை வடக்கு மாவட்டம், பாபநாசம் தொகுதி, சுவாமிமலை பேரூராட்சியில் "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை வீடு வீடாக நடைபெற்று வருகிறது. இதில் பாகம் 271, 13 வார்டு சர்வமானிய தெருவில் தஞ்சை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். இதில் மத்திய ஒன்றியச் செயலாளர் டி.கணேசன், கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெ. சுதாகர், பேரூராட்சி செயலாளர் எஸ்.எம்.எஸ்.பாலசுப்பிரமணியன், துணைச் செயலாளர் கோபால், பேரூராட்சி மன்றத் தலைவர் வைஜயந்தி சிவகுமார் மற்றும் ஐ.டி.விங் நிர்வாகிகள், பி.டி.ஏ நிர்வாகி, பி.எல்.ஏ.2 நிர்வாகிகள் உள்ளனர்.



கூத்தாநல்லூருக்கு அரசு கல்லூரி தந்த முதல்வர் அவர்களுக்கும், கல்லூரி கட்டுவதற்கு தனது சொந்த நிலத்தை இலவசமாக வழங்கிய மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ.விற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை 18வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் எம்.ஏ.மும்தாஜ் பேகம், நகர்மன்றத் தலைவர் பாத்திமா பஷீராவிடம் கொடுத்தார். கூத்தாநல்லூர் நகர்மன்றக் கூட்டத்தில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சென்னை தலைநகர் தமிழ்ச் சங்கம் சார்பில்

# பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் படத்திறப்பு!

## தமிழறிஞர்கள் பங்கேற்றனர்!

சென்னை, ஜூலை 30-

சென்னை வண்டலூர் தலைநகர் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்ச் செம்மொழிப் போராளி பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் படத்திறப்பும் இரங்கலும் 27 .7 .2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் பொதுச்செயலாளர் பாவலர் ம. கணபதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் முகிலை இராச பாண்டியன் வரவேற்றுப் பேசினார்.

செம்மொழிப் போராளி பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்களின் படத்தை தில்லித் தமிழ்ச் சங்கத்தின் பொதுச்செயலாளர் இரா. முகுந்தன் திறந்து வைத்து இரங்கல் உரையில் வா.மு சேதுராமன் அவர்கள் ஒரு தமிழின போராளி என்றும் டெல்லியில் மூன்று போராட்டங்களை செம்மொழிக்காகவும், இலங்கைக்கு ஒன்றிய அரசாங்கம் நிதி உதவி தரக்கூடாது என்றும் மற்றும் திருக்குறள் தேசிய மயமாக்க வேண்டும் என்ற மூன்று போராட்டங்களையும் அவருடன் நான் இணைந்து நடத்தியுள்ளேன் மேலும் இந்த மூன்று பதிவுகளையும் செம்மொழி போர்க்களம் என்ற புத்தகத்தில் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் பதிவு செய்துள்ளதை நினைவு கூர்ந்து தனது இரங்கல் உரையை நிறைவு செய்தார்.

நிகழ்ச்சியில் பெருங்கவிக்கோவின் புதல்வர் கவி வாணர் வா.மு.சே.திருவள்ளுவன், முனைவர் வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர் அவர்களும் தமிழ்நாடு மண்பாண்ட தொழிலாளர் நல வாரிய முன்னாள் தலைவர் சேம. நாராயணன் ஆகியோர் கலந்துகொண்டார்கள். இரண்டாயிரத்தில் புது தில்லியில் செம்மொழி மாநாடு நடத்தி தமிழுக்குப் பெருமை சேர்த்த தில்லி தமிழ்ச் சங்கத்தில் மறுபடியும் திருக்குறள் மாநாடும் திருக்குறள் தேசிய நூல் என்ற கோரிக்கையை வலியுறுத்தி போராட்டமும் நடத்த வேண்டும் என்று தலைநகர் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொண்டதற்கு இணங்க தில்லியில் 2026 இல் திருக்குறள் மாநாடு நடத்த ஏற்பாடு செய்வதாக முகுந்தன் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் குமார், நக்கீரன் தமிழ் சங்கத் தலைவர் பாஸ்கர் மற்றும் கனடா விஜயராணி கவிஞர் திருவடி பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர். கவிஞர்கள் சார்பில் இரங்கல் உரையை பலர் நிகழ்த்தினர்.






மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி பேரூர் தி.மு.க. இளைஞர் அணி சார்பில் தரங்கம்பாடி காத்தான்சாவடியில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா தெரு முனை பிரச்சாரக் கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் திருப்பத்தூர் ரஜினி, சின்னமாரியப்பன், இளம் பேச்சாளர் மா.க.சூர்யா ஆகியோர் பேசினர். உடன் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் பாரி.சரவணன் மற்றும் செ.பிரசன்னா உள்ளிட்ட பலர் உள்ளனர்.